டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 10.10.2025 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 092 - Madurai | Online Edition

# சமூகப் பாதுகாப்பில் இந்தியா சிறந்து விளங்குகிறது

## மத்திய அமைச்சர் மன்சுக் மாண்டவியா பெருமிதம்

புது தில்லி, அக்.9

குடிமக்களின் சமூகப் பாதுகாப்பை விரிவுபடுத்துவது மற்றும் அவர்களுடைய நல்வாழ்வை உறுதி செய்தல் ஆகியவற்றுக்கு சிறந்த முயற்சியை மேற்கொண்டதை அங்கீகரிக்கும் வகையில் சர்வதேச சமூகப் பாதுகாப்பு சங்கத்தின் மூலம் சமூகப் பாது காப்பில் சிறப்பான சாதனை விருது 2025 இந்தியாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இவ்விருதை கடந்த வாரம் மலேசியாவின் கோலாலம்பூரில் மத்திய அரசின் சார்பில் தொழிலாளர் நலன், வேலைவாய்ப்பு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா பெற்றுக் கொண்டார்.

இது குறித்துப் பேசிய மத்திய அமைச்சர், சமூகப் பாதுகாப்பு தளத்தில் பத்து ஆண்டுகளுக்கு மேலாக மோடி அரசு மேற்கொண்ட மாற்றத்தக்க சீர்திருத்தங்களுக்கான அங்கீகார மாக இவ்விருது வழங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

சர்வதேச சமூகப் பாதுகாப்பு சங்கத்தின் பொதுச்சபையில் இந்தியாவின் வாக்குப்பங்களிப்பு 30 ஆக அதிகரித்துள்ள தாகவும், இது எந்தவொரு உறுப்பு நாட்டையும் விட அதிகபட்ச அனுமதிக்கப்பட்ட வரம்பாகும் என்று அவர் தெரிவித்தார்.

இது, உலகளாவிய சமூகப் பாதுகாப்பு உரையாடல் மற்றும் ஒத்துழைப்பை வடிவமைப்பதில் இந்தியாவின் வளர்ந்து வரும் தாக்கம் மற்றும் தலைமைத்துவத்தை பிரதிபலிப்பதாக மன்சுக் மாண்டவியா குறிப்பிட்டார்.

உலக சமூகப்பாதுகாப்பு மன்றக் கூட்டத்தில் மூன்றாண்டு களுக்கு ஒரு முறை மதிப்புமிக்க உலகளாவிய அங்கீகாரமான சர்வதேச சமூகப் பாதுகாப்பு சங்க விருது வழங்கப்படுகிறது. அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான உலகின் மிகப்பெரிய தரவு தளங்களில் ஒன்றான இ-ஷ்ரம் தளம் குறித்து சர்வதேச சமூகப் பாதுகாப்பு சங்கம் பாராட்டு தெரிவித்துள்ளது. நான்கு ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்ட இந்தத் தளத்தின் மூலம் சமூகப் பாதுகாப்பு மற்றும் இதர நலத்திட்ட சேவைகளுக்காக 31 கோடி அமைப்புசாரா தொழிலாளர்கள் இணைக்கப்பட்டுள்ளனர்.

# இப்கோ நானோ உர விழிப்புணர்வு கருத்தரங்கம்



வேலூர், அக்.9

வேலூர் மாவட்டம் கீழ் அரசம்பட்டு கிராமத்தில் இப்கோ நானோ உரங்கள் விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் இப்கோ கள அதிகாரி கலந்து கொண்டு, விவசாயிகளுக்கு நானோ யூரியா, நானோ டி.ஏ.பி, நானோ ஜின்க் மற்றும் நானோ காப்பர் திரவ உரங்களின் பயன்பாட்டு முறைகள் மற்றும் பல்வேறு பயிர்களில் தரும் நன்மைகள் குறித்து விரிவாக விளக்கினார்.

அவர் மேலும், மண் ஆரோக்கிய சீர்குலைவு குறித்து எடுத்துரைத்து, சீரான மற்றும் சரியான அளவில் உரமிடுதலின் அவசியம் குறித்து வலியுறுத்தினார். விவசாயிகள் உரப் பயன் பாட்டை துல்லியமாக மேற்கொள்ள ட்ரோன் தொழில்நுட்பத்தின் பயன்கள் பற்றியும் விவரித்தார். அதனைத் தொடர்ந்து, இப்கோவின் சங்கட் ஹரன் பீமா யோஜனா, திட்டத்தை விவசாயி களுக்கு அறிமுகப்படுத்தினார். இந்த திட்டத்தின் கீழ், இப்கோ நானோ உரங்களை வாங்கும் ஒவ்வொரு விவசாயிக்கும் ரூ.2 லட்சம் வரை இலவச விபத்து காப்பீடு வழங்கப்படுவதாக தெரிவித்தார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# உயிர்ம வேளாண்மை விழிப்புணர்வு மற்றும் கண்காட்சி நாளை நடைபெறுகிறது

மதுரை, அக்.9

மதுரையில் 11-ஆம் தேதி உயிர்ம வேளாண்மை விழிப்புணர்வு மற்றும் கண்காட்சி நடைபெற உள்ளது என மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் கே.பி.முருகேசன் தெரிவித்துள்ளார்.

மதுரை மாவட்டம், தமுக்கம் மைதானத்தில் நாளை 11.10.25 ஆம் தேதி உயிர்ம வேளாண்மை விழிப்புணர்வு மற்றும் வேளாண் கண்காட்சி நிகழ்ச்சி நடைபெறுகிறது. மாவட்டத்திலுள்ள பல்வேறு இடங்களில் பல விவசாயிகள் - உயிர்ம வேளாண்மை முறையில் இயற்கை வேளாண்மை பல பயிர் வகைகளை சாகுபடி செய்து வருகின்றனர். பயிருக்கு தேவையான சத்துக்கள் அனைத்தும் இயற்கையிலேயே இடம் பெற்றிருக்கிறது. தற்போது இரசாயன உரங்களின் பயன்பாடு அதிகரித்துள்ளதால் மண்ணில் அங்கக கரிமம் குறைந்து காணப்படுகிறது. மேலும் நச்சுப் பொருட்கள் கலப்பிடம் இல்லாத உணவு பொருட்களை உறுதிப்படுத்துவதற்கு உயிர்ம வேளாண்மையில் ஈடுபடும் விவசாயிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கில் இந்த கண்காட்சி நிகழ்ச்சி நடக்கிறது.

இதில் வேளாண்மை துறை சார்பில் பல்வேறு அரங்குகள் அமைக்கப்பட்டு அதில் இயற்கை இடுபொருட்கள் மற்றும் பாரம்பரிய ரகங்கள் காட்சிப்படுத்தப்பட உள்ளது. மேலும் வேளாண்மை சகோதரத்துறை சார்பாக அரங்குகள் அமைக்கப்பட்டு வேளாண் பண்ணை இயந்திரங்கள், நுண்ணீர் பாசன கருவிகள், உயிர்ம உரங்கள் ஆகிய பொருட்களும் காட்சிப்படுத்தப்பட உள்ளது. மேலும் வேளாண்உற்பத்தி பொருட்களை லாபம் ஈட்டும் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களாக மாற்றுவதற்கான உத்திகள் குறித்தும், உயிர்ம உரம் காட்சிப்படுத்துதல் மற்றும் வேளாண் விஞ்ஞானிகளால் உயிர்ம வேளாண்மையின் முக்கியத்துவம், மண்வளம், பயிர் பாதுகாப்பு மற்றும் ஏற்றுமதிக்கான சந்தை வாய்ப்பு ஆகியவை குறித்து விவசாய விஞ்ஞானிகளின் கலந்துரையாடல் போன்ற பல நிகழ்வு களும் நடைபெற உள்ளது. எனவே அனைத்து விவசாயிகளும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உயிர்ம வேளாண்மை குறித்து அறிந்து கொண்டு பயனடையுமாறு வேளாண்மை இணை இயக்குநர் கே.பி.முருகேசன் தெரிவித்துள்ளார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# ரூ.51.43 இலட்சம் மதிப்பிலான விதைகள் முடக்கம்


சேலம், அக்.9

நல்வித்தே நல்விளைச்சலுக்கு ஆதாரம். இதனடிப்படையில் விவசாயிகளிடம் நல்ல தரமான விதைகள் சென்றடைவதை உறுதிபடுத்துவதை தலையாய கடமையாக கொண்டு செயல் பட்டு வருகிறது சேலம் விதை ஆய்வு பிரிவு. சேலம் மண்டலத்தில் சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் மொத்தம் 1397 உரிமம் பெற்ற அரசு மற்றும் தனியார் விதை விற்பனை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவ்விதை விற்பனை நிலையங்கள் மூலமாக விவசாயிகளுக்கு விதைகள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இவ்விற்பனை நிலையங்களில் நடைபெறும் விதை விற்பனை யானது விதை விற்பனை நிலையங்களை ஆய்வு செய்தும் விற்பனை செய்யப்படும் விதைகளில் மாதிரி எடுத்து ஆய்வுக்கு உட்படுத்தி தர பரிசோதனை செய்தும் கண்காணிக்கப்படுகிறது.




இவ்வகையில் செப்டம்பர் மாதத்தில் விதை விற்பனை அதிகளவில் நடைபெறும் 734 விற்பனை நிலையங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது. 955 விதை மாதிரிகள் எடுக்கப் பட்டது. இதில் 43 விதை மாதிரிகளில் முளைப்புத்திறன் குறைபாடுள்ளது என ஆய்வக முடிவு பெறப்பட்டதையடுத்து இவ்விதைகள் முடக்கம் செய்யப்பட்டுள்ளது. ஆய்வின் போது பதிவுச்சான்று இல்லாமல் விற்கப்பட்ட விதைகள், முளைப்புத் திறன் அறிக்கை இல்லாமல் விற்கப்பட்ட விதைகள், முறையாக பதிவு இல்லாதவை, கொள்முதல் பட்டியலில் குறைபாடு உடைய விதைகள், பதிவேடுகளில் பதியாமல் விற்கப்பட்ட விதைகள் என 68 விற்பனை தடைகள் விதிக்கப்பட்டது. இதன் மூலம் ரூபாய் 51.43 இலட்சம் மதிப்பிலான 11.2475 மெட்ரிக் டன் அளவு விதைகள் முடக்கம் செய்யப்பட்டுள்ளன.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# விதையின் ஈரப்பதம் மற்றும் விதைப்பரிசோதனையின் அவசியம்

பெரம்பலூர், அக்.9

விதை ஈரப்பதம் என்பது விதையானது ஈர்த்து வைத்த தண்ணிரின் அளவு ஆகும். விதையின் ஈரப்பதம் ஒரு விதையின் முளைப்புத் திறன், பூச்சி தாக்குதல் மற்றும் அதிகபட்ச சேமிப்பு காலம் ஆகிய வற்றை நிர்ணயம் செய்கிறது. விதையின் ஈரப்பதம் மிகக் குறை வான நிலையில் இருந்தாலும், மிக அதிகம் இருந்தாலும் விதையின் முறைப்புதிறன், சேமிப்பு கால அளவு, பூஞ்சானம் மற்றும் பூச்சி தாக்குதல் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே, விதையின் ஈரப்பதத்தை நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அளவில் சேமித்து வைக்க வேண்டும். விதையின் ஈரப்பதம் அதிகரிக்கும் போது விதையின் தரத்தை முடிவு செய்யும் முக்கிய காரணியான, விதை முளைப்புத் திறன் குறையும்.

ஒவ்வொரு பயிரின் விதை ஈரப்பதம் அப்பயிருக்கு ஏற்றவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நெல் 13 சதவீதம், சிறுதானியங்கள் 12 சதவீதம், பயறு வகைகள் 9 சதவீதம், நிலக்கடலை, எள், சூரிய காந்தி தலா 9 சதவீதம், ஆமணக்கு 8 சதவீதம், பருத்தி 10 சதவீதம் என விதை பயன்பாட்டிற்கானஅதிகபட்ச விதை ஈரப்பத சதவீதம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் தற்போது அறுவடை செய்யபட உள்ள பயிர்களின் விதைகளை நன்கு உலர்த்தி விதையின் ஈரப்பதத்தை மேற்குறிப்பிட்ட அளவிற்குள் சேமித்து வைத்து கொள்ள வேண்டும். விதையின் ஈரப்பதம் மற்றும் முளைப்புத் திறனை அறிந்து கொள்ள மாவட்ட விதைப்பரிசோதனை நிலை யத்தை தொடர்பு கொண்டு பயனடைலாம். பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டத்திற்கான விதை பரிசோதனை நிலையமானது பெரம்பலூர் புதிய பேருந்து நிலையத்திற்கு அருகில் மாவட்ட மைய நூலகம் மேல்புறத்தில் செயல்பட்டு வருகிறது. இந்த நிலையத்தில் விதையின் தரம் அறிய நிர்ணய காரணிகளான முளைப்புத்திறன், புறத்தூய்மை, ஈரப்பதம் மற்றும் பிற இரககலப்பு ஆகியவை ஆய்வு செய்யப்படுகின்றன. விதைப்பரிசோதனை நிலையத்தில் ஒரு பணி விதை மாதிரிக்கு ரூ.80/– பரிசோதனை கட்டணமாக செலுத்தி பயிர் மற்றும் இரகம், குவியல் எண் ஆகியவை குறித்த விபர சீட்டு களுடன், விதைகளை அனுப்பி பரிசோதனை செய்து கொள்ளலாம். ஆய்வறிக்கை முடிவுகள் விவசாயிகளின் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்.

இத்தகவலை பெரம்பலூர் விதைப்பரிசோதனை நிலையத்தின் வேளாண் அலுவலர்கள் ஆ ஷைலதா மற்றும் அம்பிகா தெரிவித்தனர்.

# அனைவருக்கும் தேவையே! ஜோதிட ஆலோசனைகள்!!

# அகத்தியர் ஆஸ்ட்ரோ சென்டர்



வாட்ஸப் மூலம் ஜோதிடம் மற்றும் தீர்வுகள்

DOCTOR OF ASTROLOGY

**பா.இளங்கோவன்**

M.Sc., MBA, D.Astro, Phd.,

ஜோதிட எண் கணித, வாஸ்து நிபுணர்



13 ஜி, மருதமலை ரோடு, ஏ.ஒன்.சிப்ஸ் எதிரில் பாப்பநாயக்கன் புதூர், கோவை - 641 041

தொடர்புக்கு 98420 07125

ஜோதிடம், எண் கணிதம், கைரேகை, வாஸ்து திருமணப் பொருத்தம், நிறுவனப் பெயர் வைத்தல், அதிர்ஷ்டக் கல், விவாகரத்துப் பெற்றவர்கள், பெற உள்ளவர்கள் இல்லத்திற்கே வந்து கட்டணத்துடன் ஜோதிட ஆலோசனை தருகிறோம்.







குழந்தையின் கல்வி மற்றும் எதிர்காலம்
இரத்தினக் கற்களுக்கு சிறப்பு ஆலோசனை
அதிர்ஷ்டம் பெற, வெளிநாடு செல்ல மற்றும்
தொழில் வாய்ப்பு ஆலோசனை
திருமணமாகாத பெண்களுக்கு வரன் வரும் திசை
மற்றும் அஷ்டவர்க்க துல்லிய ஆலோசனை

- ஒரு குடும்பத்தில் 5 நபருக்கு மேல் ஜோதிடம் பார்த்தால் ஒருவருக்கு இலவச ஜோதிடம்
- ஜோதிடம் கற்க ஆன்லைனில் ஜோதிட வகுப்பு
- மாதம் ஒரு முறை கோவையில் ஜோதிடரைச் சந்திக்க வாய்ப்பு
- உங்கள் இல்லத்தில் அனைத்து விசேஷங்களுக்கும் சிறப்பு ஆலோசனை



**நீங்கள் உலகில் எந்தப் பகுதியில் இருந்தும் மேற்கூறிய தேவைகளுக்கு வாட்ஸ் ஆப் எண் : 98420 07125 மூலம் பயனடையலாம்.**

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உலக ஹைட்ரஜன் மற்றும் எரிபொருள் செல்கள் தினம் 2025

கோயம்புத்தூர், அக்.9

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பொறியியல் துறை, இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம் இணைந்து (ICAR) உலக ஹைட்ரஜன் மற்றும் எரிபொருள் செல்கள் தினம் 2025-ஐ 08.10.25 அன்று புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பொறியியல் துறை பணி மனையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சியில் துறை தலைவர் பேராசிரியர் முனைவர் தே.ரமேஷ் வரவேற்புரையுடன் ஆரம்பமானது. தொடர்ந்து, வேளாண் பொறியியல் கல்லூரி முதன்மையர் முனைவர் அ.ரவிராஜ் தலைமை வகித்து, பசுமை ஆற்றல் மாற்றத்தின் எதிர்காலம் – ஹைட்ரஜனின் பங்கு குறித்து உரையாற்றினார். இந்நிகழ்வை இறுதி ஆண்டு B.Tech (Energy and Environmental Engineering) மாணவர்கள் ஒருங்கிணைத்து ஏற்பாடு செய்தனர்.



மாணவர்கள் தயாரித்த குறுந்தொகுப்பு மற்றும் ஹைட்ரஜன் உற்பத்தி, சேமிப்பு மற்றும் எரிபொருள் செல்களின் பயன்பாட்டை விளக்கினர். நிகழ்ச்சியின் சிறப்பாக, எரிவாயு கலன் (Gasifier) இயங்கும் முறை மற்றும் ஹைட்ரஜன் எரிபொருள் செல்களின் (Fuel cell) செயல்பாட்டுக்காட்சியும் (Demonstration) மாணவர் களுக்காக நடத்தப்பட்டது.

பேராசிரியர்கள், இணைபேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் முடிவில், மாணவர்களின் பங்களிப்பை பாராட்டி நன்றி தெரிவித்து, துறையின் பேராசிரியர் முனைவர் வெ.பழனிசெல்வம் நன்றியுரை வழங்கினார்.

# காலநிலை மாற்றத்தை தாங்கவல்ல வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி



இராமநாதபுரம், அக்.9

இராமநாதபுர மாவட்ட விவசாயிகளுக்கான காலநிலை மாற்றத்தை தாங்கவல்ல வேளாண் தொழில்நுட்பங்கள் இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் நிதி உதவியுடன் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையத்தில் அமைக்கப்பட்ட காலநிலை மற்றும் பேரிடர் வேளாண் மகத்துவ மையத்தால், இராமநாதபுரம் மாவட்டம் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின்–வேளாண் அறிவியல் நிலையம் (ICAR- KVK) இணைந்து 'காலநிலை மாற்றத்தை தாங்கவல்ல வேளாண் தொழில்நுட்பங்கள்' என்ற தலைப்பில் விவசாயிகளுக்கான ஒரு நாள் பயிற்சியானது 8.10.25ல் நடத்தப்பட்டது.

இந்தபயிற்சியை வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் நா.க.சதயமூர்த்தி காலநிலை மற்றும் பேரிடர் வேளாண் மகத்துவ மையத்தின் முன் முயற்சிகளைக் காட்சிப்படுத்தி பயிற்சியை துவக்கி வைத்தார். அதை தொடர்ந்து காலநிலை மாற்றத்தை தாங்கவல்ல பயிர் இரகங்கள் மற்றும் வேளாண் தொழில்நுட்பங்களை காட்சிப் படுத்தி இவ்மகத்துவ மையத்தின் இணை ஆராய்ச்சியாளர் களான முனைவர் க.செந்திலராஜா மற்றும் முனைவர் ச.மோகன்குமார் விளக்கினார்கள்.

காலநிலை மாற்றத்தால் ஏற்படும் வானிலை மாறுபாடுகள் மற்றும் அதனை நிர்வகிக்க துல்லியமான பண்ணை முடிகளை எடுத்தல் குறித்தும், வானிலை முன்னறிவிப்பு மற்றும் வானிலை முன்னறிவிப்பின் அடிப்படையிலான வேளாண் அறிவுரைகளை வழங்கும் அலைபேசி செயலிகளான TNAU-AAS மற்றும் இணையதளங்கள் பயன்பாட்டை செயல்விளக்கம் மூலம் வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் நா.க.சதயமூர்த்தி விளக்கினார்.

முனைவர் எஸ்.வள்ளல்கண்ணன், திட்ட ஒருங்கிணைப்பாளர், வேளாண் அறிவியல் நிலையம், இராமநாதபுரம் மாவட்டம், வேளாண்மையில் காலநிலை மாற்றத்தின் தாக்கங்களுக்கான தகவமைப்பு நடைமுறைகள் பற்றி எடுத்துரைத்து, இயந்திரம் மூலம் நேரடி நெல் விதைப்பு, வறட்சி காலங்களில் பயிர்களுக்கு மீள்திறனை ஊக்குவிக்கும் தொழில்நுட்பங்களான தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் பயிர் வளர்ச்சி ஊக்கிகள் (பயிர் பூஸ்டர்), ரைஸ் ரீப் (Rice reap), கிராப் ஷைன் (Crop Shine), பி.பி.எப்.எம் (PPFM) மற்றும் விதை முளைப்பை அதிகரிக்கும் நானோ தொழில்நுட்பமான நானோ விகர் (Nano vigour) குறித்து செயல்விளக்கம் மூலம் வேளாண் பெருக்களுக்கு விளக்கினார். இப்பயிற்சியில் இராமநாதபுரம் மாவட்டத்தை சார்ந்த 11 வட்டாரங் களில் இருந்து 50 முன்னோடி விவசாயிகள் பங்கேற்றனர்.

# வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடு வளர்ப்பு பற்றிய விவசாயிகள் பயிற்சி




ஈரோடு, அக்.9

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டாரத்தில் வேளாண்மை – உழவர் நலத் துறையின் மூலம் அட்மா திட்டத்தின் கீழ் வடுகபட்டி கிராமத்தில் உள் மாவட்ட அளவில் வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடு வளர்ப்பு பற்றிய விவசாயிகள் பயிற்சி க.பிரசாத், வேளாண்மை உதவி இயக்குநர், மொடக்குறிச்சி, உத்தரவின் படி நடத்தப்பட்டது. இதில் 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

பத்மநாபன், துணை வேளாண்மை அலுவலர், மொடக்குறிச்சி, வேளாண்மை உழவர் நலத்துறை மானியத்திட்டங்கள் குறித்து விளக்கினார். உயிர் உரங்களின் பயன்கள் மற்றும் நெல் சாகுபடி முறைகள் குறித்து தெளிவாக எடுத்துரைத்தார். யசோதா, தலைவர், கால்நடை ஆராய்ச்சி நிலையம், ஈரோடு, கால்நடை வளர்ப்பு பற்றியும் பூச்சி மற்றும் நோய்கள் தடுப்பு முறைகள் குறித்து எடுத்துரைத்தார்.

குழந்தைவேல், வேளாண்மை துணை இயக்குநர் (ஓய்வு), கால்நடை தடுப்பூசியின் முக்கியத்துவம் மற்றும் அதன் நன்மைகள் குறித்து தெளிவாக பயிற்சியளித்தார்.

வித்யா, கால்நடை மருத்துவர், அறச்சலூர், கால்நடைத்துறை திட்டங்கள் குறித்து விளக்கினார். அ.பிரதீப்குமார், வட்டார தொழில் நுட்ப மேலாளர், மொடக்குறிச்சி, உழவன் செயலி மற்றும் இநாம் குறித்தும் பதிவு செய்யும் முறைகள் பற்றி கூறினார். பொ.லட்சுமி, உதவி தொழில்நுட்ப மேலாளர், விவசாய அடையாள எண் பதிவு செய்தல் குறித்து கூறினார். விஜயகுமார், உதவி தொழில்நுட்ப மேலாளர்,மொடக்குறிச்சி நன்றியுரை கூறினார்.



# எது 'ஸ்டார்ட் அப்' நிறுவனம் தெரியுமா?

இன்றைய காலகட்டத்தில் ஸ்டார்ட் அப் (START UP) என்ற சொற்றொடர் செய்தித்தாளில் நிறைய பார்க்கிறோம். இது குறித்து பலவிதமான புரிதல்கள் நம்மிடைய உள்ளன. இரண்டு நாளாக உலகப் புத்தொழில் மாநாடு (GLOBAL STARTUP MEET) சென்னையில் நடைபெற்று வரும் வேளையில், ஸ்டார்ட் அப் பற்றி தெரிந்து கொள்ளுவோம்.

**புதியதாக தொடங்குவது அனைத்துமே ஸ்டார்ட் அப் கிடையாது. அப்படி என்றால் எது ஸ்டார்ட் அப்?**

டெக்னாலஜியுடன் இணைந்து புதுமைகளை உருவாக்குவதே ஸ்டார்ட் அப் நிறுவனங்கள். இண்டர்நெட் வசதி அறிமுகமான காலத்தில் அமெரிக்காவில் டாட் காம் நிறுவனங்கள் அதிகளவில் தொடங்கப்பட்டன. இதை தான் ஸ்டார்ட் அப் நிறுவனம் என வகைபடுத்தப்பட்டது. அதே போல புதுமையுடன் வரும் தொழில்கள் 'ஸ்டார்ட் அப் நிறுவனங்களாக மாறுகின்றன.

**இதற்கு ஏதேனும் எடுத்துக்காட்டு உண்டா?**

உதாரணமாக உணவு டெலிவரி செய்யும் நிறுவனங்கள் தற்போது அதிகமாக உள்ளன. இவற்றின் தொழிலே வாடிக்கையாளர் இருக்குமிடத்தில் உணவை டெலிவரி செய்வதுதான். ஆனால் இந்நிறுவனங்கள் அதை ஒரு தொழில்நுட்பத்துடன் (TECHNOLOGY) இணைத்து, ஓட்டலின் பெயர், அங்குள்ள உணவு வகைகள், அதில் வாடிக்கையாளர்களுக்கு தனக்கு பிடித்த உணவை தேர்ந்தெடுப்பது, அந்த உணவு எவ்வளவு நேரத்தில் டெலிவரியாகும், அதற்கான கட்டணம் என்ன? யார் அந்த உணவை டெலிவரி செய்கிறார்கள் என அனைத்து தகவல்களும் ஒரே இடத்தில் கிடைக்கும் வகையில் அவர்களுடைய செயலி (APP) வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனால் வாடிக்கையாளர்கள் மிக எளிதாக இருந்த இடத்திலே உணவை ஆர்டர் செய்து சாப்பிட முடியும். இப்போது புரிகிறதா? உங்களுக்கு ஸ்டார்ட் அப் நிறுவனத்தைப் பற்றி.

புதுமையுடன் விரைவில் வளரக்கூடிய நிறுவனங்களே‘ ஸ்டார்ட் அப்‘ நிறுவனம் எனப்படுகிறது.

மக்களுக்கான தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில், அவர்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு வழங்கும் வகையிலான ஐடியா மட்டுமே இருந்தால், அசத்தலாக ஸ்டார்ட் அப் நிறுவனத்தை தொடங்கி ஜெயிக்கலாம்.

என்ன தொடங்கலாமா?

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# ஆர்கானிக் மிளகாய் நாற்றங்கால் மேலாண்மை & நடவு வயல் தயாரிக்க பயிற்சி



விருதுநகர், அக்.9

விருதுநகர் மாவட்டம், திருச்சுழி வட்டாரத்திலுள்ள ஆலடிபட்டியில் விருதுநகர் பாரம்பரிய பயிர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் சார்பாக அங்கக முறையில் மிளகாய் சாகுபடியாளர்களுக்கு நாற்றங்கால் மேலாண்மை & நடவு வயல் தயாரிப்பது குறித்து பயிற்சி 8.10.25 அன்று நடைபெற்றது.

இந்த பயிற்சியை தொடங்கி வைத்து FPO செயல் அலுவலர் அருண்குமார் கூறுகையில், நமது உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் சார்பில் 200 முதன்மை விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு முழுக்க முழுக்க ஆர்கானிக் முறையில் இந்தாண்டில் மிளகாய் (கே.2 சம்பா மிளகாய்) வத்தல் சாகுபடிக்கு தேர்வு செய்யப்பட்டு பல்வேறு வகையான பயிற்சி வழங்கப்பட்டு வருவ தாகவும் விரைவில் அங்கக சான்று (ORGANIC CERTIFICATE N.P.O.P) பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் கூறினார். மேலும் நிலத்தின் மண் மாதிரி மற்றும் பாசன கிணற்று நீர் மாதிரிகளை எடுத்து ஆய்வுக்கு அனுப்பப்பட்டு வருவதாக கூறினார்.

நிகழ்ச்சியில் வேளாண் ஆலோசகர் சந்திரசேகரன், தனது தொழில்நுட்ப உரையில், நாற்றாங்கால் மேட்டு பாத்தி முறையில் அமைக்க வேண்டும், மிளகாய் விதைக்கு சூடாமானஸ் 10 கிராம்

என்றளவில் கலந்து விதை நேர்த்தி செய்து பாத்தியில் விரலால் கோடிட்டு வரிகளில் விதைகளை தூவி விடவேண்டும். நாற்றுகள் முளைத்து வெளிவரும் வரை வைக்கோல் கொண்டு மூடாக்கு போட்டு செடிகள் வந்தபின் அகற்றிட வேண்டும். நாற்றங்காலில் சாறு உறிஞ்சும் பூச்சிகளை கட்டுப்படுத்த வேப்பங்கொட்டை கரைசல் 5% அல்லது 3 ஜி கரைசல் தெளிக்கலாம். ஏதேனும் வாடல் கழுத்து அழுகல் நோய் காணப்பட்டால் பூஞ்சான மருந்தான டி.விரிடி மக்கிய சாண குப்பையுடன் கலந்து விடலாம். நாற்றுகளை 40-45 நாளில் பிடுங்கி நடவு செய்யலாம்.

நடவு வயல் நன்றாக உழுது கட்டிகள் உடைத்து பார் அமைக்க வேண்டும். மக்கிய சாண குப்பை / மண் புழு உரம் 2-4 டன் / ஏக்கருக்கு இடவேண்டும். செடிக்கு செடி 45 செ.மீ யும் வரிசைக்கு வரிசை 60-75 செ.மீ இடைவெளியில் ஈரப்பதமாக இருக்கும் போது தானம் போட்டு நடவு செய்ய வேண்டும். நடவிற்கு முன்பு நிலத்திற்கு ஜிவமிர்த கரைசலை ஊற்ற வேண்டும். இது பயிருக்கு உரமில்லை. ஆனால் மண்ணில் உள்ள ஆயிரக்கணக்கான நுண்ணுயிர் களுக்கு சூப்பரான உணவாகும். அதுமட்டுமல்லாது ஊட்டமேற்றிய தொழு உரத்தை (அசோஸ்பைரில்லம் + பாஸ்போ பேக்டிரியா+ வேம் + பொட்டாசிய பேக்டீரியா) கலந்த ENRICHED FYM இடவேண்டும். எக்காரணம் கொண்டு இரசாயன உரங்களையோ, இரசாயன பூச்சிக் கொல்லி மருந்தோ பயன்படுத்திட கூடாது என்றார். ஆர்கானிக் மிளகாய் வத்தலுக்கு வெளிநாட்டுல ஏகப்பட்ட கிராக்கி இருப்பதால் கூடுதலான விலை கிடைக்க வாய்ப்புள்ளதாக கூறினார். நிகழ்ச்சியில் முன்னோடி விதை பண்ணை விவசாயிகள் ஆசிர்வாதம், சுவாமி தாஸ் தேவதாஸ் ராஜன், ஜெயமேரி சுந்தர். கருப்பையா. ஏசடியான் உட்பட பலர் கலந்து கொண்டு தங்களுடைய அனுபவங்களையும் சந்தேகங்களையும் கூறினார்கள்.

FPO செயல் அலுவலர் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பார்த்த சாரதியின் முயற்சியால் 3 விவசாயிகளுக்கு சொட்டுநீர் பாசன வசதியை தோட்டக்கலைத்துறை மூலமாக ஏற்படுத்தி கொடுத்து உள்ளனர். இந்த FPO செயல்பாடுகளை விரைவு படுத்தி உத்வேகமாக செயல் பட சிசிடி நிர்வாக இயக்குநர் பத்மாவதி, திட்ட இயக்குநர் ஜான் பிரிட்டோ வழிகாட்டியாக இருந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# சம்பா பருவத்தில் நெல் நாற்றங்கால் மற்றும் நடவு தொழில்நுட்பம்

தஞ்சாவூர், அக்.9

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டாரத்தில் நடப்பு சம்பா பருவத்தில் 6200 ஹெக்டேர் பரப்பளவு இலக்காக நிர்ணயிக்கப் பட்டுள்ளது. ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவு இதுவரை ஒத்திசைவு செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது நாற்றங்கால் மற்றும் நடவு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. நாற்றங்கால் மேலாண்மை மற்றும் நடவு தொழில்நுட்பம் குறித்து பட்டுக்கோட்டை வேளாண்மை உதவி இயக்குனர் பொறுப்பு அப்சரா வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியுள்ள தாவது, ஒரு ஹெக்டேர் நெல் நடவிற்கு 20 சென்ட் நாற்றங்கால் பரப்பு தேவை. விதை படுக்கைகளை உருவாக்க 8 முதல் 10 மீட்டர் நீளம் மற்றும் 2.5 மீட்டர் அகலம் கொண்ட 30 சென்டி மீட்டர் அகலம் உள்ள வாய்க்கால்களை அமைக்க வேண்டும். சேற்று மண்ணை வாய்க்காலில் இருந்து சேகரித்து விதைப் படுக்கைகளில் பரப்ப வேண்டும்.

முளைத்த விதைகளை விதைப் பாத்தியில் சீராக விதைத்து, மேற்பரப்பில் மெல்லிய நீர் படலத்தை பராமரிக்க வேண்டும். நடவு செய்வதற்கு உகந்த வயது நான்காவது இலை நிலை நாற்றுகளை 2 சதவீத ஜிங் சல்பேட் கரைசலில் 30 நிமிடங்கள் நனைத்து பின்னர் நடவு செய்ய வேண்டும். நாற்றங்காலில் ஊட்டச்சத்து மேலாண்மையாக ஒரு டன் முழுமையாக சிதைந்த தொழு உரத்தை மண்ணில் சீராக இடவும். நாற்றுகளை 25 நாட்களில் பிடுங்க வேண்டும் என்றால், பத்து நாட்களுக்கு முன்பு டிஏபி உரத்தை பயன்படுத்த வேண்டும். வேர்கள் முறிந்து போகும் பிரச்சனை உள்ள களிமண்ணில், விதைத்த பத்து நாட்களுக்குப் பிறகு 4 கிலோ ஜிப்சம் மற்றும் ஒரு கிலோ டி ஏ பி பயன்படுத்தலாம். நெல் விதைகளை உயிர் உரங்களுடன் விதை நேர்த்தி செய்ய 500 மில்லி அசோஸ்பைரில்லம் அல்லது பாஸ்போபாக்டீரியா அல்லது அசோபாஸ் அல்லது பொட்டாஷ் கரைக்கும் பாக்டீரியா ஆகியவற்றை அரிசி கஞ்சியை பயன் படுத்தி நேர்த்தி செய்து, விதைப்பதற்கு முன் 30 நிமிடங்கள் நிழலில் உலர்த்தவும். இவ்வாறு செய்வதால் நெல் வயல்களில் மண் மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்தலாம்.

# சம்பா நடவு வயலில் பாசியை கட்டுப்படுத்தும் வழிமுறைகள்

சம்பா நடவு வயலில் பாசியை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து பட்டுக்கோட்டை வேளாண்மை உதவி இயக்குனர் விளக்கம் அளித்துள்ளார்.

பட்டுக்கோட்டை வட்டாரத்தில் உள்ள அனைத்து வருவாய் கிராமங்களிலும் தற்போது சம்பா நெல் சாகுபடி நடவு மற்றும் விதைப்பு நடைபெற்று நடைபெற்று வருகிறது. தற்போதைய சூழ்நிலையில் இளம் பயிர்களில் பாசி பாதிப்பு இருப்பதால் பயிர்களின் வளர்ச்சி பாதிக்கப்பட்டு நீர் மற்றும் ஊட்டச் சத்துகளை வேர்கள் எடுத்துக் கொள்ள முடியாமல் போய் விடுகிறது. மிகவும் ஆழமாக உள்ள நிலப் பகுதிகளில் பயிர் களை ஐந்து அங்குள்ள ஆழத்திற்கு கீழ் நடவு செய்யும்போது பயிர் மேலே வருவதில் சிரமம் ஏற்பட்டு கிளை வெடிக்க முடியாமல் போய்விடுகிறது.

## காப்பர் சல்பேட்

வயல்களில் இடும் டிஏபி மற்றும் சூப்பர் உரங்களை அதிக அளவில் பாசி எடுத்துக்கொண்டு பயிரின் வளர்ச்சி நளிந்து காணப்படும்.

ஒவ்வொரு நெல் குத்தை சுற்றிலும் பாசி படர்ந்து வேரின் காற்றோட்டத்தை முற்றிலும் தடுத்து விடுவதால் வேரின் வளர்ச்சி குறைந்து, மண்ணிலிருந்து சத்துக்களை எடுத்துக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டு விடுகிறது. இதனால் நெற்பயிர் ஆனது மஞ்சள் நிறமாக மாறி காய்ந்து விடும். பாசியின் அளவு அதிகமாக இருக்கும் பட்சத்தில் ஏக்கருக்கு இரண்டு கிலோ காப்பர் சல்பேட்டினை வாங்கி பழைய வேட்டி துணிகளில் 100 கிராம் வீதம் சிறு சிறு பொட்டலங்களாக கட்டி 10 முதல் 20 இடங்களில் ஆங்காங்கே போட்டு விட வேண்டும். இதனால் பாசியின் தாக்கத்தினை குறைக்க முடியும்.

காப்பர் சல்பேட் நீரில் கரைந்து அதை சுற்றியுள்ள இடங்களில் பாசி முழுவதையும் கட்டுப்படுத்துவதோடு மேலும் பாசியின் விதைகளையும் கட்டுப்படுத்தும்.இந்த தருணத்தில் டிஏபி உரத்தை இடுவதை முற்றிலுமாக தவிர்க்க வேண்டும். மேலும் பாசியின் வளர்ச்சி தென்பட்டால் 15 நாட்கள் கழித்து மீண்டும் காப்பர் சல்பேட்டினே இடலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# வருடாந்திர விதை திருவிழா



கடலூர், அக்.9

கடலூர் மாவட்டம், வேளாண்மை அறிவியல் நிலையம், விருத்தாசலம் மற்றும் விதை மையம், கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், இணைந்து புதிய மேம் படுத்தப்பட்ட விதை இரகங்கள் மற்றும் விதை நேர்த்திக்கான தொழில்நுட்பங்களை எடுத்துரைக்கும் வண்ணமாகவும், பல்வேறு ஆராய்ச்சி நிலையங்களின் கண்டுப்பிடிப்புகளை மக்களிடையே விழிப்புணர்வு கொடுக்கும் வண்ணத்தில் 09.10.2025 அன்று கண்காட்சி அரங்கங்கள் அமைக்கப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

விழாவினை ஏற்பாடு செய்து விவாசாயிகளை அழைத்து விதை திருவிழாவின் வரவேற்புரையினை திட்ட ஒருங்கிணைப்பாளர், முனைவர் க.நடராஜன், நல்கினார். இதில் தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையத்தில் வெளியிடப்பட்ட ADT 59 நெல் இரகம் மற்றும் சணப்பை புதிய இரகம் ADT 1 ஆகிய இரகம் பற்றி விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. மண்டல ஆராய்ச்சி நிலையம் விருத்தா சலத்தில் கண்டுப்பிடிக்கப் பட்ட விஆர்ஐ 10 மணிலா இரகம் காட்சிப்படுத்தப்பட்டது. காய்கறி ஆராய்ச்சி நிலையம் பாலூர் மற்றும் கரும்பு ஆராய்ச்சி நிலையம் வெளியிட்ட புதிய இரகங்கள் காட்சி படுத்தப்பட்டது. முன்னதாக விழாவினை சிறப்பித்து முனைவர் உமாராணி, துவக்கயுரை வழங்கினார். தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குநர் முனைவர் கா.சுப்பரமணியன், மண் வள பாதுகாப்பு பற்றியும், முறையான உர உபயோகம் பற்றியும் கருத்து களை முன் வைத்தார். கோவை, வேளாண் விரிவாக்க மைய இயக்குநர் முனைவர் பி.பொ.முருகன், உழவர் பெருமக்களுக்கு வாழ்த்துரை வழங்கி அகில இந்திய அளவில் வேளாண்மை அறிவியல் நிலையம், விருத்தாசலம் பெற்ற விருதின் சிறப்பினை வாழ்த்தினார். மாவட்ட வேளாண் இணை இயக்குநர் லஷ்மி காந்தன், வேளாண் துறையில் இருக்கும் மானிய திட்டங்களை பற்றி தெளிவாக எடுத்துக்கூறினார். கம்மாபுரம் மற்றும் விருத்தாச்சல வட்ட வேளாண் உதவி இயக்குநர்கள் பார்வையில் இடுப்பொருள் கண்காட்சி அமைக்கப்பட்டது.

முனைவர் ரெ.பாஸ்கரன், க.செ. விஜய்செல்வராஜ், க.ராஜா, மு.கதிரவன், விதை உற்பத்தி தொழில் நுட்பங்களை தெளிவாக எடுத்துரைத்தனர். இதில் வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் முனைவர் உமா, கண்ணன், சுகுமாறன், ஜெயக் குமார், காய்த்ரி, கலைச்செல்வி, தொழில்நுட்ப வல்லுநர்கள், மீன லட்சுமி, குமார், சாமூண்டீஸ்வரன், ஆகியோர் ஒருங்கிணைத்து சிறப்பாக நடத்தினர். இதில் தனுக்கா, கருடா, சுருள்பாசி விதை நிறுவனம், பாரம்பரிய விவசாயிகளின் விளைப்பொருட்கள் பார்வைக்கு வைக்கப்பட்டன. இதில் கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த 150க்கும் மேற்பட்ட விவசாய பெருமக்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.




# நவீன மரவள்ளி சாகுபடி பயிற்சி மற்றும் செய்முறை விளக்க பயிற்சி நடைபெற்றது



சேலம், அக்.9

சேலம் மாவட்டம், பெத்த நாயக்கன்பாளையம் தாலுக்கா, ஏத்தாப்பூரில் அமைந்துள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலையத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் இந்திய ஆராய்ச்சி கழகத்தின் கீழ் செயல்பட்டு வரும் மத்திய கிழங்கு வகைப்பயிர்கள் ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து அகில இந்திய ஒருங்கிணைந்த பயிர்கள் ஆராய்ச்சி (ICAR-CTCRI-AICRP-SCSP 2025-26) திட்ட நிதியுதவியுடன் வேளாண் இடுபொருட்கள் வழங்குதல், கருத்துக் காட்சி, நவீன மரவள்ளி சாகுபடி பயிற்சி மற்றும் செய்முறை விளக்கம் 8.10.25 அன்று நடைபெற்றது.

இதில் முனைவர் ப.அருட்செந்தில், பேராசிரியர் (பயிர் மரபியல்) வரவேற்புரையாற்றினார். முனைவர் சா.ரா.வெங்கடாசலம், பேராசிரியர் மற்றும் தலைவர், மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலையம், ஏத்தாப்பூர் தொடக்க உரையாற்றினார். முனைவர் சி.இந்துராணி, பேராசிரியர் மற்றும் தலைவர், காய்கறிப் பயிர்கள் துறை, தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூர் வாழ்த்துரை வழங்கினர். மேலும் முனைவர் கே.வெங்கடேசன், முதன்மையர் (தோட்டக்கலை), தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோயம் புத்தூர் சிறப்புரையாற்றினார்கள்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக முனைவர் ஜி.பைஜு, இயக்குநர் இந்திய ஆராய்ச்சி கழகம் – மத்திய கிழங்கு வகைப் பயிர்கள் ஆராய்ச்சி நிறுவனம், ஸ்ரீகாரியம் திருவனந்தபுரம், கேரளா, திட்ட பயனாளிகளுக்கு வேளாண் இடுபொருட்கள் வழங்கி, தொழில்நுட்ப கையேட்டினை வெளிட்டு தலைமையுரையாற்றி னார்கள். இப்பயிற்சி திட்டத்தின் முன்னேற்பாடுகளை திட்ட ஆய் வாளர் மற்றும் ஒருங்கிணைப்பாளர் முனைவர் மு.வேல் முருகன், பேராசிரியர் (தோட்டக்கலை) இறுதியில் நன்றியுரையாற்றினார். இவ்விழாவில் 50–க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு கருத்துக்காட்சியினை பார்வையிட்டு தொழில்நுட்பங்களை கண்டறிந்து பயனடைந்தார்கள்.

# உரம் வாங்கும் போது கட்டாயப்படுத்தி இணைப் பொருட்களை கொடுக்கக் கூடாது

# வேளாண் துறை எச்சரிக்கை



பெரம்பலூர், அக்.9

பெரம்பலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் பாபுவின் அறிவுரையின்படி வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு ராதாகிருஷ்ணன் பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள உரம் விற்பனை நிலையங்களை திடீர் ஆய்வு செய்தார். ஆய்வின்போது உரங்களை பி ஓ எஸ் இயந்திரம் மூலம் மட்டுமே விற்பனை செய்ய வேண்டும், விவசாயிகளுக்கு யூரியா உரங்களை அதிகமாக கொடுக்கக் கூடாது. யூரியா உரங்களை விற்பனை செய்யும் போது கண்டிப்பாக பில் முகவரியுடன் விவசாயியின் தொலைபேசி எண்ணுடன் விவசாயின் கையொப்பம் பெற்று கொடுக்க வேண்டும். உரம் விற்பனை நிலையத்தில் உரம் இருப்பு மற்றும் விலைப்பட்டியலை அவசியம் பராமரிக்க வேண்டும். எப்பொழுதும் விற்பனை நிலை யத்தில் இருப்பு உரங்கள் சரியாக வைத்துக் கொள்ள வேண்டும். உரம் வைத்திருக்கும் கிடங்கு களுக்கு அவசியம் அனுமதி பெற்றிருக்க வேண்டும். அனுமதி பெற்றுள்ள உரங்களை மட்டுமே விற்பனை செய்ய வேண்டும் என்று கூறினார். மேலும் விவசாயிகள் யூரியா உரத்தை அதிகமாக பயன்படுத்தக்கூடாது. அடி உரமாக பயன்படுத்தக்கூடாது, அடி உரமாக காம்ப்ளக்ஸ் உரங் களையும் பயன்படுத்த வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் யூரியா உரம் கலைக்கொல்லியுடன் சேர்த்து பயன்படுத்தக் கூடாது. விவசாயிகள் அவர்களின் பயிர் சாகுபடி பரப்புக்கு ஏற்ற வகையில் மட்டுமே யூரியாவை பயன்படுத்த வேண்டும். அதிகபட்சமாக ஒரு ஏக்கருக்கு யூரியா இரண்டு மூட்டைக்கு மேல் பயன்படுத்த வேண்டாம். தழைச்சத்துக்காக யூரியாவுக்கு பதிலாக நானோ யூரியா பயன்படுத்தலாம். வேளாண்மை விரிவாக்க மையத்தில் கிடைக்கக்கூடிய அனைத்து வகையான உயிர் உரங்களையும், அனைத்து வகையான பயிருக்கு ஏற்ற நுண் ஊட்டச்சத்து உரங்களை பயன்படுத்துவதால் பயிருக்கு வழங்கப்படும் உரம் அளவை குறைத்து, மண்ணின் வளம் அதிகரித்து உர செலவு குறைத்து அதிக மகசூல் பெறலாம் என்று வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு ராதாகிருஷ்ணன் கூறினார்.

# ஆவுடையார்கோவிலில் கிசான் கோஸ்திஸ்




புதுக்கோட்டை, அக்.9

வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் கீழ் கிசான் கோஸ்திஸ்– உழவர் திரல் பரவலாக்கம் புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார் கோவில் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிக்கு வேளாண்மை உதவி இயக்குனர் சவிதா தலைமை தாங்கினார். வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையம் இணை பேராசிரியர் முனைவர் மாரிமுத்து கலந்து கொண்டு தற்பொழுது சம்பா நெல் பருவத்திற்கு தேவையான பருவம், தரமான விதைத்தேர்வு, விதை நேர்த்தி, ஊட்டச்சத்து மேலாண்மை, களை மற்றும் பூச்சி, நோய் மேலாண்மை பற்றி எடுத்துக் கூறினார். மேலும் அங்கக வேளாண்மை தொழில் நுட்பங்களான உயிரியல் விதை நேர்த்தி, மண் புழு உரம் தயாரிக்கும் முறைகள், பஞ்சகாவியா, ஜீவாமிர்தம், மீன் அமிலம், இயற்கை பூச்சி விரட்டிகள் தயார் செய்யும் முறைகள் பற்றி எடுத்துக் கூறினார்.

வேளாண்மை உதவி இயக்குனர் சவிதா, வேளாண்மை துறையின் மூலம் தற்போழுது செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் பற்றி எடுத்து கூறினார். துணை வேளாண்மை அலுவலர் ரவிச்சந்திரன் வரப்பில் உளுந்து சாகுபடி செய்வதின் நன்மைகள், நெல்லுக்கு பின் பயறு சாகுபடி, மண் வளத்தை பாதுகாக்கும் முறைகள் பற்றி எடுத்துக் கூறினார். சுமார் 100 விவசாயிகள் பங்கு கொண்டு பதாகைகள் கையில் ஏந்தி அங்கக பண்ணையம் தொழில் நுட்பங்கள் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தினர். வட்டார தொழில் நுட்பம் மேலாளர் ஜகுபர்அலி, அனைவரையும் வரவேற்று பேசினார். இந்த நிகழ்ச்சி ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் ராமநாதன் மற்றும் கீர்த்திகா ஆகியோர்கள் செய்து இருந்தனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# தண்டுத்துளைப்பானை கட்டுப்படுத்தும் முறைகளை எடுத்துரைத்த வேளாண்மை உதவி இயக்குநர்



ராணிப்பேட்டை, அக்.9

ராணிப்பேட்டை மாவட்டம், நெமிலி வட்டாரம், வேளாண்மை உதவி இயக்குநர் அருணா குமாரி தற்பொழுது நெற்பயிரில் தண்டுத்துளைப்பான் தாக்குதல் அதிகமாக தென்படுவதால் அதை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

நெற்பயிரில் தண்டுகளை துளைத்து தாக்கும் குணத்தை கொண்ட இதன் புழுக்கள் தண்டின் உள்ளே சென்று குருத்தை அழிப்பதால் நடுக் குருத்து எளிதில் காய்ந்து விடும் அல்லது கதிர் உருவாகும் தருணத்தில் தாக்கும் போது கதிர்கள் வெண்ணிற பதர்களாக மாறி காய்ந்து விடும். இதனால் விளைச்சல் 20 சதவீதம் முதல் 70 சதவீதம் வரை குறைய வாய்ப்பு உள்ளது. எனவே தண்டு துளைப்பான் தாக்குதலை கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த பாதுகாப்பு முறைகளை கையாளலாம். அதாவது முதலில் முன்பயிர் அறுவடைக்குப் பின் வயலில் உள்ள பாதிக்கப்பட்ட தூர்களை முறையாக அகற்றி அழிப்பதன் மூலம் அடுத்த போகத்தில் நெல் பயிர் சாகுபடியில் தண்டு துளைப்பான் தாக்குதலை குறைக்கலாம். நாற்றுக்களை நெருக்கமாக நடவு செய்வதை தவிர்க்க வேண்டும் மற்றும் வேப்பங்கொட்டைச் சாறு தெளித்தல், நாற்று நடுவின்போது நாற்றின் நுனியை கிள்ளி விடுதல் ஆகிவற்றின் மூலமும் தண்டு துளைப்பான் புழுக்களை கட்டுப்படுத்தலாம். வயலில் நீர் தேங்குவதை தவிர்க்க வேண்டும். வரப்பு மற்றும் வயல்களை தூய்மையாக பராமரிப்பதன் மூலமும், வரப்பு பயிர் சாகுபடி செய்வதன் மூலமும் தாக்குதலை குறைக்கலாம். இனக்கவர்ச்சி பொறிகள் மற்றும் சூரிய விளக்குப் பொறிகளை அமைத்து அந்து பூச்சிகளை கவர்ந்த அழிக்கலாம். தண்டு துளைப்பான் பூச்சிகளை கட்டுப்படுத்த டிரைக்கோடெர்மா ஜப்பானிக்கம் 5 மி.லி. வீதம் இருமுறை நாற்றங்காலில் தெளிக்க வேண்டும். சேதார நிலை 25 சதவீதம் இருந்தால் புளூபென்டமைடு 125 கிராம் மற்றும் லேம்டாசைலோத்ரின் 500 மி.லி. ஆகிய பூச்சிக்கொல்லி மருந்துகளில் ஏதாவது ஒன்றினை 500 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம் என கூறினார்.



# விதையின் ஈரப்பதத்தை அறிய பரிசோதனை செய்ய வேண்டும்

விவசாயிகள் விதைகளின் ஈரப்பதத்தை அறிய அவற்றை பரிசோதனை செய்ய வேண்டும் என்று கடலூர், விதைப் பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் சே.தில்லைக் கரசி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், ஒவ்வொரு பயிரின் விதைக்கும் ஒரு குறிப்பிட்ட ஈரப்பதம் மட்டுமே இருக்க வேண்டும். உற்பத்தி செய்த விதைக்கு விதைச்சான்று பெறுவதற்கும், விதையை சேமிப் பதற்கும் ஈரப்பதம் முக்கிய பங்கு வகிக்கிறது. அதிகபட்ச ஈரப்பதம் ஒவ்வொரு பயிருக்கும் மாறுபடும். நெல்லுக்கு 13 சதவீதமும், சிறுதானியத்திற்கு 12 சதவீதமும், பருப்பு வகை பயிர்கள் மற்றும் எண்ணெய் வித்து பயிர் விதைகளுக்கு 9 சதவீதம் என ஈரப்பதம் இருக்கலாம். சேமிக்கும் விதையில் குறிப்பிட்ட அளவிற்கு மேல் ஈரப்பதம் இருந்தால் விதை சேமிப்பின் போது பூச்சி நோய் தாக்குதல் ஏற்பட்டு விதையின் முளைப்புதிறன் பாதிக்கப்படும். முளைப்புத் திறன் பாதிக்கப்பட்டால் அந்த விதை விதைப்பதற்கு ஏற்றதாக இருக்காது.

எனவே விதையின் முளைப்புதிறனை பாதுகாக்க விதையின் ஈரத்தன்மையை அறிந்து விதைகளை தேவையான ஈர தன்மைக்கு கொண்டு வர வேண்டும். இதன் மூலமே நீண்ட நாட்களுக்கு விதைகளை சேமித்து வைக்க முடியும்.

விதை உற்பத்தியாளர்கள் மற்றும் விவசாயிகள் தங்களிடம் உள்ள விதையின் ஈரப்பதத்தை அறிந்து கொள்வதற்கு விதை குவியலில் இருந்து 100 கிராம் விதை மாதிரியை எடுக்க வேண்டும். அந்த விதைகளை காற்றுபுகாத பிளாஸ்டிக் பைகளில் அடைத்து பயிர் ரகம், குவியல் எண் ஆகியவற்றை குறிப்பிட்டு விதையின் ஈரப்பதத்தை அறிய பரிசோதனைக்கு அனுப்ப வேண்டும். முளைப்புத்திறன் மற்றும் புறத்தூய்மை ஆகிய விதைத் தரங்களை அறிந்து கொள்ள வேண்டிய நிலை இருந்தால் தேவையான அளவு விதை மாதிரிகளை எடுத்து ஈரப்பதம் அறிய வேண்டிய விதை மாதிரியுடன் இன்னொரு பையிலிட்டு பயிர் ரகம், குவியல் எண் ஆகியவற்றை குறிப்பிட்டு பரிசோதனைக்கு அனுப்ப வேண்டும்.

ஒரு விதை மாதிரிக்கு ரூ.80/- வீதம் கட்டணம் செலுத்தி நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ 97, பிருந்தாவன் நகர், பெண்ணை கார்டன், 50 அடி ரோடு, கோண்டூர் போஸ்ட், உண்ணாமலை செட்டி சாவடி, கடலூர் - 607 006 என்ற முகவரியில் விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் விதைப்பரிசோதனை நிலையத்திற்கு அனுப்ப வேண்டும். இந்த விதை மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டு முடிவுகள் சம்மந்தப்பட்ட விவசாயிகளின் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும். இவ்வாறு செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளது.